## TRB - TNTET – 2012 - STUDY MATERIAL

TNTET – 2012. FREE TRAINING FOR ALL.
By
NAPOO SOUNTHAR
www.napoos.blogspot.in

நன்றி : M.கணேஷ்ராமன் D.T.Ed.,B.A., தட்டச்சு : பெ.மணிகண்ட பிரபு

# சூழ்நிலையியல் அறிவியல் – II

## ( வகுப்பு - V )

01) நிலம், நீர், காற்று ஆகியவை உயிரற்ற காரணிகளாகும்
02) மகரந்ததூள் சூல்முடியை அடைவதால் கருவுறுதல் நடைபெறுகிறது
03) கருவுறுதலுக்கு பிறகு சூலகம் கனியாக மாறுகிறது
04) கருவைச் சுற்றியுள்ள சூலக உறையில் சேமிக்கப்படுவது உணவு
05) சதைப்பகுதிக்குள் விதைகளாக மாறி பொதிந்திருப்பது சூல்கள்
06) மகரந்ததூள் சூலக முடியை அடைவது மகரந்தச் சேர்க்கை
07) ஒரு மலரில் உள்ள மகரந்ததூள் அந்த மலரின் சூலகமுடியை அடைவது தன் மகரந்தச் சேர்க்கை
08) ஒரு பூவின் மகரந்ததுகள் அதே இனம் சார்ந்த மற்றொரு சூல்முடியை அடைவது அயல் மகரந்தச் சேர்க்கை
09) காற்று மூலமாக நடைபெறும் மகரந்த சேர்க்கை அயல் மகரந்தச் சேர்க்கை
10) விதை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சில காரணிகளால் எடுத்து செல்லப்படுவது விதை பரவுதல்
11) ஆலமரம், புளியமரம், வேப்பமரம், மாமரம் தோன்றிய இடம் இந்தியா
12) இலவம்பஞ்சு, முருங்கை, எருக்கு போன்றவை காற்றின் மூலம் பரவும்
13) தென்னை, ஆகாயத்தாமரை, அல்லி, தாமரை போன்றவை நீரின் மூலம் பரவும்
14) வெண்டை, உளுந்து, காரமணி, பால்சம், பயறுவகைகள் போன்றவை வெடித்துப் பரவும்
15) நாயுருவி, புல், நெறுஞ்சி போன்றவை விலங்குகள் மூலம் பரவும்
16) பெருமரங்கள் பறவைகளின் எச்சத்தில் உள்ள விதைகள் மூலம் பரவும்
17) முதல்நிலை உற்பத்தியாளர்கள் தாவரங்கள்
18) பூச்சிகளால் கவரப்படும் பூவின் பகுதி மகரந்தத்தூள்
19) விலங்குகள் ஊருக்குள் வரக் காரணம் வாழிடம் சுருங்குதல்
20) சென்னை மாவட்டத்தில் மான்கள் தேசிய பூங்கா உள்ள இடம் கிண்டி
21) காஞ்சிபுரத்தில் உள்ள பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் வேடந்தாங்கல்
22) யானை, காட்டெருமை சரணாலயம் அமைந்துள்ள இடம் முதுமலை
23) புலி, சிறுத்தை சரணாலயம் அமைந்துள்ள இடம் ஆனைமலை
24) வெள்ளைப்புலி, நரி, குரங்கு, சரணாலயம் அமைந்துள்ள இடம் காஞ்சிபுரம் (அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா)
25) இந்தியாவில் உள்ள மொத்த தேசிய பூங்காக்கள் 66
26) இந்தியாவில் உள்ள மொத்த வனவிலங்கு பாதுகாப்பகங்கள் 17
27) இந்தியாவின் வனவிலங்கு பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட பூங்கா கார்பெட் தேசிய பூங்கா
28) கார்பெட் தேசிய பூங்கா அமைந்துள்ள இடம் உத்ராஞ்சல்
29) SPCA (Society for the Prevention of Cruelty to Animals) என்பது விலங்கு வதைத் தடைச் சட்டம்
30) கிர் காடுகளில் அதிகமாக காணப்படும் விலங்கு சிங்கம்
31) புலிகள் சரணாலயம் உள்ள இடம் முண்டந்துறை
32) இந்திய காட்டுவாழ் உயிரினங்கள் வாரியம் தொடங்கப்பட்ட ஆண்டு 1952
33) வனவிலங்கு வாரவிழா தொடங்கப்பட்ட ஆண்டு 1955
34) வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு 1972
35) தேசிய வனவிலங்கு உயிர்வாழ் திட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு 1983
36) தேசியபூங்கா மற்றும் பாதுகாக்கப்பட்ட உயிர்க்கோளங்கள் அமைக்கப்பட்ட ஆண்டு 1986
37) பட்டாம்பூச்சி முழு வளர்ச்சியை அடைய கடக்க வேண்டிய பருவங்கள் 4
(1.முட்டைப் பருவம் 2.புழுப் பருவம் 3.கூட்டுப்புழுப் பருவம் 4.முழு வண்ணத்துப்பூச்சி)
38) பட்டாம்பூச்சி முட்டையிடும் இடம் இலையின் அடிப்பகுதி

napoos.blogspot.in
www.TeacherTN.com

39) வண்ணத்துப்பூச்சிகளின் சொர்க்கம் என்று அழைக்கப்படும் மாநிலங்கள் அஸ்ஸாம், சிக்கீம்
40) உலகிலேயே மிகப்பெரிய வண்ணத்துப்பூச்சி அலெக்ஸாண்டிரா குயின்
41) அலெக்ஸாண்டிரா குயின் காணப்படும் நாடு நியூகினி
42) அலெக்ஸாண்டிரா குயின் நீளம் 25.செ.மீ
43) வண்ணத்துப்பூச்சியின் சுவை உணரும் உருப்புகள் அதன் கால்களில் உள்ளது
44) வண்ணத்துப்பூச்சிக்கு கண் இமைகள் இல்லை
45) நிறம், சத்தம், உடலசைவு வாயிலாக வண்ணத்துப்பூச்சி கருத்துகளை பறிமாறிக் கொள்கிறது
46) சமுதாயப் பூச்சிகள் என அழைக்கப்படுவது தேனீக்கள்
47) அயல் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகள் தேனீக்கள்
48) தேன்கூட்டில் காணப்படும் தேனீக்களின் வகைகள் 3
49) இராணித் தேனீயின் ஆயுட்காலம் இரண்டு ஆண்டு
50) ஆண் தேனீக்களை விட வேலைக்காரத்தேனீ சிறியவை
51) தேனீக்கள் தனது இறக்கைகளை நொடிக்கு 18,000 தடவை வேகமாக அசைக்கிறது
52) இனப்பெருக்கம் செய்ய திறனற்ற ஒரு பெண் தேனீ வேலைக்காரத்தேனீ
53) மிகவும் சுறுசுறுப்பான வேலைக்காரத்தேனீயின் ஆயுட்காலம் 28 முதல் 38 நாள்கள் வரை
54) இனப்பெருக்கத்திற்கு மட்டுமே பயன்படும் தேனீ ஆண்தேனீ
55) உயர் ஊட்ட மதிப்பு கொண்டது தேன்
56) இரத்தசோகை, குடல்புண் போன்றவற்றிற்கு மருந்தாகப் பயன்படுவது தேன்
57) 20 இலட்சம் பூக்களில் தேனீக்கள் சேகரிக்கும் தேனின் அளவு 450 கிராம்
58) 1கி.கி தேனில் 3200 கலோரி ஆற்றல் உள்ளது
59) தென் மாநிலங்களில் தேன் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது தமிழ்நாடு
60) ஆண்டுதோறும் 25 மில்லியன் கிலோவிற்கு மேலாக தேன் எடுக்கப்படும் இடம் மார்த்தாண்டம் (கன்னியாகுமரி)
61) சுறுசுறுப்பு, கூட்டுமுயற்சி, தலைமைக்கு கட்டுப்படுதலுக்கு சான்று தேனீ
62) வண்ணத்துப்பூச்சிக்கு இறக்கைகளும், உடலுறுப்புகளும் தோன்றும் பருவம் 3ம் பருவம்
63) காற்று மண்டலத்திற்கு மேலே பரந்து விரிந்த பகுதி விண்வெளி
64) முதன் முதலில் இரஷ்யா ஸ்புட்னிக் செயற்கைக் கோளை அனுப்பிய ஆண்டு 1957
65) இஸ்ரோ (ISRO) என்பது இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையம்
66) ISRO நிறுவப்பட்ட ஆண்டு 1969
67) ISRO நிறுவப்பட்ட இடம் கர்நாடகா - பெங்களூர்
68) நம் நாட்டின் இராக்கெட் ஏவுதளம் அமைந்துள்ள இடம் ஸ்ரீ ஹரிகோட்டா
69) இந்தியா முதன் முதலில் அனுப்பிய செயற்கைக் கோள் ஆரியப்பட்டா
70) ஆரியப்பட்டா வெற்றிகரமாக அனுப்பப்பட்ட ஆண்டு 1975
71) பல நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த இந்திய வானியல் அறிஞர்கள் ஆர்யப்பட்டர், பாஸ்கரர்
72) மனிதனால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விலங்கு லைக்கா என்ற நாய் ஆகும்
73) விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதர் யூரிகாகரின்
74) யூரிகாகரின் இரஷ்யாவைச் சேர்ந்தவர்
75) யூரிகாகரின் விண்வெளிக்கு சென்ற ஆண்டு 1961
76) விண்வெளிக்கு சென்ற முதல் இந்தியர் இராகேஷ் சர்மா
77) இந்திய வம்சாவளி விண்வெளி பெண் ஆய்வாளர்கள் கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ்
78) நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ரின், மைக்கேல் காலின்ஸ் போன்றோர் அமெரிக்க விண்வெளி ஆய்வாளர்
79) முதன் முதலாக நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ரின், மைக்கேல் காலின்ஸ் ஆகியோர் நிலவில் கால் வைத்த நாள் 16 - ஜூலை - 1969
80) இந்தியா மனிதனை நிலவுக்கு அனுப்பும் திட்டத்தை செயல்படுத்த அனுப்பப்பட்ட செயற்கைக் கோள் சந்திராயன்-1
81) நிலவைக் குறித்து நமது அறிவை மேம்படுத்துவதே சந்திராயன் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்
82) சந்திராயன்-1 விண்ணில் அனுப்பப்பட்ட நாள் 22 - அக்டோபர் - 2008
83) நிலவில் தண்ணீர் இருப்பதாக கண்டறிந்த செயற்கைக் கோள் சந்திராயன்-1
84) நிலவு தன்னைத்தானே சுற்றிக் கொள்ள எடுத்துக் கொள்ளும் கால அளவு 27.32 நாள்
85) விண்வெளிக்குச் சென்ற முதல் இந்திய வம்சாவழிப் பெண் கல்பனா சாவ்லா

www.TeacherTN.com

86) நீர் சூடேறி மேகமாவதும் மேகம் குளிர்ந்து மழையாகவும் பொழிந்து மறுபடியும் பூமிக்கு திரும்புவது நீர் சுழற்சி
87) உலகில் இயற்கையில் கிடைக்கும் பொருள்களில் மூன்று நிலைகளிலும் காணப்படுவது நீர்
88) தூய்மையான நீர் நிறமற்றது, மணமற்றது.
89) மேகங்களில் மிகுந்த குளிர்ச்சியின் காரணமாக பெய்யும் மழை ஆலங்கட்டி மழை
90) நீர் ஒரு சர்வ கரைப்பான்
91) ஆழம் அதிகரித்தால் நீரின் அழுத்தம் அதிகரிக்கும்
92) "நீரின்றி அமையாது உலகு" என்று கூறியவர் வள்ளுவர்
93) பூமியில் உள்ள மொத்த நீரில் கடல் நீர் 97.3%
94) குடிப்பதற்கு பயன்படும் நீரின் அளவு 1%
95) கடலைத் தவிர மற்ற நீர் நிலைகளில் காணப்படும் நீரின் விகிதம் 2.7%
96) இயற்கையின் அற்புதமான படைப்புகளில் ஒன்று நீர்
97) பண்டை காலத்தினர் நீரை கொடையாக கொடுப்பதை நற்செயல் என்று கருதினர்
98) இனி வருங்காலம் சிறந்த காலமாக விளங்க தேவையான வளம் நீர் வளம்
99) உலக நீர் நாள் மார்ச் 22
100) மனித நாகரீகம் அனைத்தும் வளர்ந்த இடம் ஆற்றங்கரை
101) நீர் ஒரு பொது உடைமை
102) காற்றுக்கு எடை, அழுத்தம் உண்டு
103) காற்றுக்கு இடத்தை அடைத்துக் கொள்ளும் பண்பு உண்டு
104) இயற்கை உரமாக பயன்படும் வாயு நைட்ரஜன்
105) அலாங்கார விளக்குகளில் நிறங்களை உருவாக்கப் பயன்படும் வாயு மந்தவாயு
106) ஆர்கான், கிரிப்டான், நியான், செனான் போன்றவை மந்தவாயுக்கள்
107) செயற்கை நீரூற்றுகளை ஏற்படுத்த காற்றழுத்தம் பயன்படுகிறது
108) எல்லாத் திசைகளிலும் பரவும் தன்மை கொண்டது காற்று
109) வளிமண்டலத்தில் அதிக அளவு உள்ள வாயு நைட்ரஜன்
110) காற்று பரவி உள்ள இடம் வளிமண்டலம்
111) உணவுப்பொருளின் இயல்பான நிலையிலேயே பாதுகாப்பான சேமிப்பு காலத்தை அதிகரிக்கலாம்
112) உப்பு, சர்க்கரை, எண்ணெய், தேன் போன்றவை இயற்கையான ஆரோக்கியமான சிறந்த உணவுப்பதப்படுத்திகள்
113) $60^0C$ ல் பாலை ½ மணிநேரம் காய்ச்சி வேகமாக குளிரச்செய்யும் முறை பாஸ்டியர் முறை
114) உணவுப்பொருள் கெடாமல் பாதுகாக்க வினிகர் மற்றும் சிட்ரிக் அமிலம் பயன்படுகிறது
115) தமிழ்நாட்டில் பாஸ்டியர் நிறுவனம் அமைந்துள்ள இடம் குன்னூர்
116) உப்பு நுண்ணுயிரிகளிடமிருந்து உணவு பொருள் கெடாமல் பாதுகாக்கப்படுகிறது
117) உணவு இருமுறைகளில் சேமிக்கப்படுகிறது
118) உணவு வேகவைக்கும் போது உயிர்ச்சத்துக்கள் வீணாகாமல் வேகவைக்க வேண்டும்
119) மருந்து, மாத்திரைகளை சமையலறையில் வைக்கக் கூடாது
120) நெடுங்காலமானாலும் கெட்டுப்போகாத இயற்கை உணவு தேன்
121) மூளை மூன்று உறைகளால் பாதுகாக்கப்படுகிறது
122) மூளை பல நுண்ணிய நரம்புசெல்களால் ஆனது
123) நரம்பு மண்டலத்தின் மையமாக செயல்படுவது மூளை
124) மூளை மூன்று பகுதிகளை கொண்டது. (பெருமூளை, சிறுமூளை, முகுளம்)
125) மூளையின் பெரும்பகுதி பெருமூளை
126) மண்டை ஓடு எட்டு அசையா மூட்டுகளால் ஆனது.
127) நினைவாற்றலின் மையமாக செயல்படுவது பெருமூளை
128) மனித இனத்தின் மொழிகளையும் குறியீடுகளையும் உணர்ந்து கொள்ள உதவுவது பெருமூளை
129) பெருமூளையின் இடப்பகுதி உடலின் வலப்பகுதி செயல்களையும், பெருமூளையின் வலப்பகுதி இடப்பகுதி செயல்களையும் கட்டுப்படுத்துகிறது
130) உடல்தசைகளின் இயக்கத்தை ஒருங்கிணைப்பது சிறுமூளை
131) உடலின் சமநிலையை கட்டுப்படுத்துவது சிறுமூளை
132) மதுஅருந்துதலால் சிறுமூளை பாதிக்கப்படுகிறது
133) ஒருவன் தூங்கும்போது சிறுமூளை ஓய்விலிருக்கும்

www.TeacherTN.com

134) மூளையின் தண்டுப் பகுதி முகுளம்
135) மூளையை தண்டுவடத்தோடு இணைக்கும் பாலம் முகுளம்
136) சுவாசம், இதய இயக்கம், இரத்த சுழற்சி இயக்கத்திற்கு உதவுவது முகுளம்
137) மனிதனின் உயிர்முடிச்சு என்படுவது முகுளம்
138) மூளை நன்கு செயல்பட ஆக்ஸிஜன் தேவை
139) தொடர்ந்து நான்கு நிமிடம் ஆக்ஸிஜன் மூளைக்கு செல்லாவிட்டால் மூளை செயல்பாட்டை இழக்கும்
140) மூளையின் திறனை அதிகரிப்பது போதிய உறக்கம், சத்துள்ள உணவு
141) நமது புலனுறுப்புகள் புற உலகின் ஜன்னல் ஆகும்
142) புலன் உறுப்புகள் புற உலகின் செய்திகளை மூளைக்கு எடுத்துச் செல்கிறது.
143) கண்கள் எலும்பு குழிக்குள் பாதுகாக்கப்படுகிறது
144) கண்இமை, புருவம் காயத்திலிருந்து கண்களை பாதுகாக்கிறது
145) கண்களுக்கு தேவையான சத்து வைட்டமின் A
146) பச்சைக்காய்கறி, கேரட், பால்படுபொருளில் அடங்கியுள்ளவை வைட்டமின் A
147) காது ஒலிகளை உள்வாங்கி செவியுணர் நரம்பு வழியாக மூளைக்கு எடுத்துச்செல்கிறது
148) கேட்டல், சமநிலைப்படுத்துதல் போன்றவற்றிற்கு காது பயன்படுகிறது
149) மூக்கின் உள்ளே உள்ள உரோமங்கள் நுரையீரலுக்குள் தூசி செல்லாமல் பாதுகாக்கிறது
150) சளி ஏற்படும் போது மூக்கினுள் காற்றை மிக வேகமாக உறிஞ்சுதல் கூடாது
151) நாவின் மேற்பரப்பில் மிகுதியாக காணப்படுபவை சுவைமொட்டுகள்
152) சுவைமொட்டுகள் வழியாக அறுசுவைகளை உணர்கிறோம்
153) சூடான உணவுகளை உட்கொண்டால் சுவைமொட்டுகள் பாதிப்படையும்
154) நமது உடலின் மிகப்பெரிய புலன் உறுப்பு தோல்
155) தோல் உடல் உள்ளுறுப்புகளைப் பாதுகாக்கிறது
156) உடல் வெப்பநிலையை கட்டுப்படுத்துவது தோல்
157) நாம் நலமாக வாழ, நம் புலனுறுப்புகளை பாதுகாப்பது அவசியமானது
158) நமது புலன் உறுப்புகள் 5 (கண்கள்,காதுகள்,மூக்கு,நாக்கு,தோல்)
159) மூளைத்தண்டு என்று அழைக்கப்படுவது முகுளம்
160) மலேரியா, டெங்கு, சிக்கன்குன்யா பரப்புவது கொசுக்கள்
161) நீர் மனிதனால் மாசுபடும் போது ஏற்படுவது இன்னல்கள்
162) மலேரியாவை உண்டாக்கும் தீங்குயிரி பிளாஸ்மோடியம்
163) மலேரியாவைப் பரப்பும் கொசு பெண் அனாபிலஸ்
164) மூளைக்காய்ச்சலை பரப்பும் கொசு கியூலெக்ஸ்
165) மூளைக்காய்ச்சலை உருவாக்கும் தீங்குயிரி ஜப்பானிஸ்-என்செபாலிடிஸ் வைரஸ்
166) பைலேரிசியாஸ் (யானைக்கால்) உருவாக்கும் தீங்குயிரி ஊச்சரேரியாபாங்கராப்டி
167) யானைக்கால் நோயை பரப்பும் கொசு கியூலெக்ஸ்
168) டெங்கு காய்ச்சலை உருவாக்கும் தீங்குயிரி பிளேவி வைரஸ்
169) மஞ்சள் காய்ச்சலை பரப்பும் கொசு ஏடிஸ் கொசு
170) நோய்ப் பரப்பிக் கட்டுப்பாடு என்பது நோயுண்டாக்கும் உயிரிகளை உயிரிகள் (அ) இரசாயன முறையில் கட்டுப்படுத்துவது, கண்காணிப்பது, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது ஆகும்
171) ஓர் உயிரிகளை மற்றொரு உயிரியின் அறிமுகத்தால் கட்டுப்படுத்துவது உயிரியல் கட்டுப்பாடு
172) உயிரியல் கட்டுப்பாட்டுக்கு உதவும் ஒரு உயிரினம் கம்பூசியா மீன்
173) டி.டி.டீ, ஆர்கனோ பாஸ்பேட், மாலத்தியான் போன்றது கொசுவை கட்டுப்படுத்தும் இரசாயன மருந்து
174) பன்றிக் காய்ச்சலை பரப்பும் வைரஸ் இன்புளூயன்சா A,B,C
175) பன்றிக் காய்ச்சல் ஏற்பட்டவரின் வெப்பநிலை $100^0F$ க்கு மேல்
176) பன்றிக் காய்ச்சல் ஏற்பட்டவருக்கு 48மணி நேரத்திற்க்குள் கொடுக்கப்பட வேண்டிய மருந்து டமிஃப்ளூ மற்றும் சிலின்ஸா
177) 1918 ல் ஏறக்குறைய 5 கோடி மக்களை இறக்கச்செய்த பன்றிக்காய்ச்சலை உருவாக்கிய தீங்குயிரி எச்-1 என்-1
178) 200ஆண்டுகளுக்கு முன்னரே கண்டறியப்பட்ட நோய் டெங்கு காய்ச்சல்
179) சிக்கன் குன்யாவை பரப்பும் தீங்குயிரி டோக்கோ வைரஸ்
180) சிக்கன் குன்யாவால் பாதிக்கப்பட்டவரின் உடல் வெப்பநிலை $102.2^0F$

www.TeacherTN.com

181) மருந்துகளும், தடுப்பூசிகளும் இதுவரை இல்லாத ஒரு காய்ச்சல் சிக்கன் குன்யா

182) வைரஸ் தொற்றுயிரியால் காற்று மூலமாக பரவக்கூடிய நோய் சாதாரண சளி

183) சளியின் கால அளவை குறைக்கப் பயன்படுவது வைட்டமின் C

184) நீரின் வாயிலாக பரவும் நோய் காலரா

185) காலராவை உருவாக்கும் தீங்குயிரி விப்ரியோ காலரே எனும் பாக்டீரியா

186) கிராமப்புற சுகாதார மையம் ஆரம்ப சுகாதார நிலையம்

187) நகர்ப்புற சுகாதார மையம் அரசு பொது மருத்துவமனைகள்

188) மாவட்ட சுகாதார மையம் அரசு தலைமை மருத்துவமனைகள்

189) பகலில் கடிக்கும் கொசு ஏடிஸ்

190) பொருள்கள் மூன்று வகைப்படும், (திட,திரவ,வாயு பொருள்கள்)

191) எது ஒன்று தனக்கென்று ஓர் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டும் குறிப்பிட்ட நிறையைப் பெற்றுள்ளதோ அதுவே பொருள்

192) குறிப்பிட்ட இடத்தை ஆக்கிரமித்து, குறிப்பிட்ட வடிவம் உடையதுமான பொருள் திடப்பொருள்

193) குறிப்பிட்ட இடத்தை ஆக்கிரமித்து, குறிப்பிட்ட வடிவம் இல்லாத பொருள் திரவப்பொருள்

194) குறிப்பிட்ட இடத்தை ஆக்கிரமிக்காமலும், குறிப்பிட்ட வடிவமற்றதுமானது வாயுப்பொருள்

195) திடப்பொருள், திரவப்பொருள் அழுத்தத்தால் மாற்றமடைகின்றன

196) வாயுப்பொருள் அடைத்துக்கொண்டு இடம் அழுத்தத்தால் குறைகிறது

197) பழங்கால மனிதன் மழை, குளிர் விலங்குகளிடமிருந்து தம்மை பாதுகாக்க நெருப்பை பயன்படுத்தினான்

198) அறிவியல் உலகில் தற்கால உலகில் மனிதன் தட்பவெப்பநிலைக்கு வீடுகள் கட்டுகின்றனர்

199) ஆர்டிக் பகுதியில் காணப்படும் வீடுகள் பனிவீடுகள்

200) -46°C வெப்பநிலையில் ஆர்டிக் பகுதி காணப்படுவதால் பனிவீடுகள் உருகுவதில்லை

201) பனிவீடுகளின் மற்றொரு பெயர் இக்ளூக்கள்

202) பனி வீடுகளில் வாழ்பவர்கள் எக்ஸிமோக்கள்

203) நிலநடுக்கத்திற்கு உட்படும் தீவுகளில் கட்டப்படுபவை மூங்கில்மர வீடுகள்

204) அந்தமான், இந்தோனீஷியா, ஜப்பான் போன்ற நாடுகளில் காணப்படுவது மூங்கில்மர வீடுகள்

205) சென்னை, மும்பை முதலிய பெருநகரங்களில் காணப்படுவது அடுக்குமாடி வீடுகள்

206) தற்காலிக வீடுகள் என அழைக்கப்படுவது கூடாரவீடுகள்

207) பல்வேறு இயக்கத்தை சேர்ந்தவர்கள் முகாம்கள் அமைக்கும் போது கூடாரவீடுகள் அமைக்கின்றனர்

208) கூடாரவீடுகளை நகரும் வீடுகள் என்றும் அழைக்கலாம்

209) மரத்தின் மேல் கட்டப்படும் வீடுகள் பாதுகாப்பு வீடுகள், அந்தர வீடுகள் என்று அழைக்கலாம்

210) மலை, காடு போன்றவற்றில் விங்குகளிடமிருந்து பாதுகாக்க மரத்தின் மேல் கட்டுகின்றனர்

211) கடல் தீவுகளில் பரவலாக காணப்படும் வீடுகள் மரவீடுகள்

212) மிகப்பெரிய நகரம், தலைநகரங்களில் காணப்படுவது விண்ணைத் தொடும் கட்டடங்கள்

213) இடப்பற்றாக்குறையை சமாளிக்க கட்டப்படுவது விண்ணைத் தொடும் கட்டடங்கள்

214) துபாயிலுள்ள புர்ஜ் காலிபா உலகின் மிக உயர்ந்த விண்ணைத் தொடும் கட்டிடமாகும்

215) 160 தளங்கள் கொண்ட புர்ஜ் காலிபாவின் உயரம் 828 மீட்டர்

216) நடப்பதற்கும், ஓடுவதற்கும், வேலை செய்வதற்கும் தேவைப்படுவது ஆற்றல்

217) சூரிய ஆற்றலை பயன்படுத்தி ஒளிச்சேர்க்கையுன் மூலம் உணவு தயாரிப்பது தாவரம்

218) சூரியஒளி மூலமாகவும், குப்பை, கழிவுப்பொருளிலிருந்து மின்னாற்றல் கிடைக்கிறது

219) நம் வீட்டிற்கு 20 யூனிட் கிடைக்க மின்நிலையங்களில் தயாரிக்கப்பட வேண்டிய அளவு 100 யூனிட் மின்சாரம்

220) 100 யூனிட் மின்சாரம் கம்பி வழியாக வரும்போது இழக்கும் அளவு 80 யுனிட்

221) பெட்ரோலியம், நிலக்கரி போன்றவை புதுப்பிக்க இயலாத ஆற்றல் மூலங்கள்

222) சூரியன், காற்று, நீர், மாட்டுச்சாணம் போன்றவை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள்

223) சென்னை கடற்கரையில் நடமாடும் கடையில் காணப்படும் விளக்கு சூரிய விளக்கு

224) கைக்கடிகாரம், கால்குலேட்டர் சூரியஆற்றலை பயன்படுத்தி இயங்குபவை

225) எரிபொருள் பயன்படுத்தாமல் சமையல் செய்ய பயன்படுவது சூரிய சமைப்பான்

226) சூரியஆற்றல் உற்பத்தியில் உலகளவில் முதலிடம் வகிப்பது இந்தியா

227) இந்தியா சாணஎரிவாயு தயாரிப்பில் இரண்டாம் இடத்தில் உள்ளது

228) நீர்மின் உற்பத்தியில் இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது

229) காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா நான்காம் இடத்தில் உள்ளது.

www.TeacherTN.com

230) நம் வீட்டில் 1 யூனிட் சேமித்தால் மின்நிலையங்களில் 5 யூனிட் தயாரிப்பது சேமிக்கப்படும்
231) டங்க்ஸ்டன் இழை விளக்குகளுக்கு பதிலாக CFL (Compact Florescent Lamp) பயன்படுத்துவதால் மின்பயன்பாடு குறைகிறது
232) தேசிய ஆற்றல் சேமிப்பு நாள் டிசம்பர்-14
233) பெட்ரோல், நிலக்கரி உருவாக பலகோடி ஆண்டுகள் ஆகின்றன
234) இந்தியாவின் அனைத்து துறைகளிலும் அளப்பெரிய வளார்ச்சிக்கு செயற்கைக்கோள் முக்கியமான பங்கு வகிக்கிறது
235) செயற்கைக்கோளை விண்ணிற்கு அனுப்பி விண்வெளி ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் விக்ரம்.வி.சாராபாய்
236) விக்ரம்.வி.சாராபாய் பிறந்த ஆண்டு 1919
237) வி.சாராபாய் குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத்தில் பிறந்தார்
238) வி.சாராபாய் இறந்த ஆண்டு 1971-Oct-30
239) வி.சாராபாய் இறந்த இடம் கேரளா
240) வி.சாராபாயின் ஆய்வு வழிகாட்டி சர்.சி.வி.ராமன்
241) வி.சாராபாய் பத்மவிபூஷன், பத்மபூஷன் போன்ற விருது பெற்றவர்
242) ஆர்யப்பட்டா எனும் செயற்கைக்கோளை வடிவமைத்தவர் சாராபாய்
243) நமது நாடை உலக நாடுகளுக்கு இணையாக தலை நிமிர வைத்தவர் சாராபாய்
244) இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம், விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்தியவர் சாராபாய்
245) இந்திய விண்வெளி ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்க காரணமாக இருந்தவர் சாராபாய்
246) காஸ்மீக் கதிர்கள் விண்ணிலிருந்து பூமியை நோக்கி வந்தடைவதை கண்டறிந்தவர் சாராபாய்
247) விண்வெளியில் ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிப்பது காஸ்மீக் கதிர்கள்
248) அறிவியல் அனைவருக்கும் புரியும் வகையில் எளிமையாக்குவதை குறிக்கோளாக கொண்டவர் சாராபாய்
249) தி சாட்டிலைட் இண்டஸ்ட்ரியல் டெலிவிஷன் சோதனையில் வெற்றி கண்டவர் சாராபாய்
250) விக்ரம்.வி.சாராபாய் இறந்த வயது 52
251) 2400 சிற்றூரிலிருந்து 5 மில்லியன் மக்கள் பல தொலைக்காட்சி அலைவரிசைகளை பார்க்கக் காரணமானவர் விக்ரம்.வி.சாராபாய்
252) "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று கூறியவர் வள்ளலார்
253) தாவரங்களுக்கும் உணர்வுகள் உண்டு என்று கண்டறிந்தவர் சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ்
254) சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ் பிறந்த இடம் மைமென்சிங்
255) சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ் பிறந்த மாநிலம் வங்காளம்
256) சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ் பிறந்த மாவட்டம் டாக்கா
257) சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ் பிறந்தஆண்டு 1858 NOV 30
258) கொல்கத்தா மாநிலக்கல்லூரி இயற்பியல் துறை பேராசிரியராகப் பணியாற்றிய அறிவியல் அறிஞர் சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ்
259) ரேடியோ அலைகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ்
260) கம்பி இல்லாமலே மின்சாரத்தை அலைகளாக அனுப்ப முடியும் என நிருபித்தவர் சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ்
261) மார்கோனி வானொலியை கண்டுபிடிக்க காரணமாக இருந்தவர் சர்.ஜெகதீஸ் சந்திரபோஸ்
262) ரேடியோ அலைகளை கண்டுபிடிக்க உதவும் கருவி கோஹரர்
263) தாவரங்களின் நுட்பமான உணர்வை வெளிக்காட்டும் கருவி கிரஸ்கோக்கிராப்
264) கோஹரர்,கிரஸ்கோக்கிராப் போன்றவை சர்ஜெகதீஸ் சந்திரபோஸ் கண்டுபிடிப்புகள்
265) சர்.ஜெகதீஸ் சந்திரபோஸிற்கு 1917ம் ஆண்டு ஆங்கில அரசால் சர் எனும் உயரிய பட்டம் வழங்கப்பட்டது
266) போஸ் நிறுவனம் அமைந்துள்ள இடம் கொல்கத்தா
267) செடிகள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருவது போஸ் நிறுவனம்
268) லூயி பாஸ்டியர் நுண்ணுயிரியல் வேதியியல் விஞ்ஞானி ஆவார்
269) லூயிபாஸ்டியர் வெறிநாய் கடிக்கு மருந்து கண்டறிந்தார்
270) ஆக்சிஜன் இல்லாமலேயே சில நுண்ணுயிரிகள் வாழமுடியும் என்பதை கண்டறிந்தவர் பாஸ்டியர்
271) லூயிபாஸ்டியர் பிறந்த ஆண்டு 1822 DEC 27
272) லூயிபாஸ்டியர் இறந்த ஆண்டு 1875 SEP 28
273) லூயிபாஸ்டியர் இறந்த இடம் பிரான்ஸ் நாட்டில் செயிண்ட் குளோடு
274) பிரான்ஸில் உள்ள ட்ராஸ்டார்க் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய அறிவியல் அறிஞர் லூயிபாஸ்டியர்

www.TeacherTN.com

275) தும்பா இராக்கெட் ஏவுதளத்தை திருவனந்தபுரத்தில் நிறுவியவர் விக்ரம்.வி.சாராபாய்

276) யூகலிப்டஸ் , சின்கோனா போன்றவை மூலிகை மரங்கள்

277) தாவரத்தின் தண்டுப்பகுதி தீக்குச்சி தயாரிக்க , கப்பல் கட்ட பயன்படுகிறது

278) தீக்குச்சி தயாரிக்கப் பைன் மரம் பயன்படுகிறது

279) தேக்கு, பூவரசு, மூங்கில் போன்ற மரங்கள் வீடுகட்ட பயன்படுகிறது

280) மா,மஞ்சனத்தி,படாக் போன்ற மரங்கள் வீட்டு பயன்பாட்டு பொருள் தயாரிக்கப் பயன்படுகிறது

281) தேக்கு,ரோஸ்வுட்,பிரம்பு போன்ற மரங்கள் கலைப்பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது

282) உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்ச்சியை அளிக்கும் நறுமண பொருள்கள் மிளகு, பட்டை, கிராம்பு, மஞ்சள், ஏலக்காய்,ஜவ்வாது,சந்தனம்

283) மருத்துவ குணம் நிறைந்த தாவரங்கள் மூலிகைகள் எனப்படும்

284) பித்தம் நீக்கும் மருந்தாகப் இஞ்சி பயன்படுகிறது

285) அஜீரணம் நீக்கும் மருந்தாக புதினா பயன்படுகிறது

286) தலைவலி நீக்கும் மருந்தாக யூகலிப்டஸ் பயன்படுகிறது

287) வாய்ப்புண்ணை நீக்கும் மருந்தாக மணத்தக்காளி மருந்தாக பயன்படுகிறது

288) வல்லாரை நினைவாற்றலை வளர்க்க பயன்படுகிறது

289) துளசி சளிக்கு மருந்தாகப் பயன்படுகிறது

290) சோற்றுக்கற்றாழை,குப்பைமேனி தோல் நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது

291) கீழாநெல்லி மஞ்சள் காமாலைக்கு மருந்தாகப் பயன்படுகிறது

292) உடல் குளிர்ச்சிக்கு நன்னாரி பயன்படுகிறது

293) மார்புச்சளி நீக்கும் மருந்தாக தூதுவளை பயன்படுகிறது

294) ரோஜா, சாமந்தி, ஆர்க்கிட் போன்ற மலர்களை கொண்டு பூச்செண்டு தயாரிக்கப்படுகிறது

295) சங்குப்பூவிலிருந்து நீலநிறச்சாயம் தயாரிக்கப்படுகிறது

296) மொரிண்டா தாவரப்பட்டையிலிருந்து மஞ்சள் நிறச்சாயம் எடுக்கப்படுகிறது

297) பூ தாவரங்களிலிருந்து எடுக்கப்படும் சாயங்கள் துணிகளில் வண்ணமேற்ற, மை,பெயிண்ட்,வார்னிஷ் தயாரிக்க பயன்படுகின்றன

298) வேப்பம்பூ, முருங்கைப்பூ, வாழைப்பூ,காலி:ஃப்ளவர் ஆகியவை சமையலுக்குப் பயன்படுகின்றன

299) இரத்தப் புற்றுநோய்க்கு நித்தியக்கல்யாணிப்பூ பயன்படுகிறது

300) இதயக்கோளாறு, இரத்தசுத்திகரிப்புக்கு செம்பருத்தி பயன்படுகிறது

301) குடல்பூச்சிகளை அழிக்க வேப்பம்பூ பயன்படுகிறது

302) ஆஸ்துமாவுக்கு ஊமத்தம்பூ பயன்படுகிறது

303) பல்வலி நீக்க கிராம்பூ பயன்படுகிறது

304) உடல் குளிர்ச்சிக்கு ரோஜாப்பூ பயன்படுகிறது

305) சளியை குணப்படுத்த தும்பைப்பூ பயன்படுகிறது

306) இரும்புச்சத்து, இரத்தப்பெருக்கத்துக்கு முருங்கைப்பூ பயன்படுகிறது

307) கிரிக்கெட் மட்டை செய்ய பயன்படும் மரம் வில்லோமரம்

308) மலையின் உயரம் செல்லச் செல்ல குளிர் அதிகமாக காணப்படும்

309) தாவரத்தில் கிடைக்கும் நறுமணப்பொருள்கள் மருத்துவகுணம் கொண்டது

310) தாமரை, பாரிஜாதம், ரோஜா, மல்லிகை, மருக்கொழுந்து, சாமந்தி, செண்பகம், டாலியா போன்றவை வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன

Mail : napoos@ymail.com Cell : 8608225854, 9659966192

www.TeacherTN.com